பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 01 2026 SATURDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** நவீன காலத்தில் ஏற்படக்கூடிய நோய்களுக்கு ஒருங்கிணைந்த பாரம்பரிய மருத்துவம் தீர்வுகாணும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2)** தமிழகத்தை சேர்ந்த தியாகிகளையும், சான்றோர்களையும் பிரதமர் திரு நரேந்திர மோடி தவறாமல் நினைவுகூருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

**3)** இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்ட 9 மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

**4)** தேர்தல் ஆதாயத்திற்காக தமிழக அரசு ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டத்தை திமுக அரசு அறிவித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

**5)** நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

நவீன காலத்தில் ஏற்படக்கூடிய நோய்களுக்கு ஒருங்கிணைந்த பாரம்பரிய மருத்துவம் தீர்வுகாணும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

சென்னையில், தேசிய சித்தா தினத்தையொட்டி இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், சித்த மருத்துவம் பழங்கால தன்மை கொண்டதாகவும், புதிய நோய்களுக்கு தீர்வை ஏற்படுத்தும் மருத்துவ குணம் கொண்டது என்றும் தெரிவித்தார்.

அகத்தியர் காலத்து வாழ்க்கை முறைகளில் பாரம்பரிய மருத்துவ குணங்கள் கொண்ட மூலிகைகள் பயன்படுத்தப்பட்டதாகவும், அன்றாட உணவாக அவை இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆயுஷ் அமைச்சகம் உருவாக்கப்பட்டதாகவும், கோடிக்கணக்கான மக்கள் பாரம்பரிய மருத்துவத்தால் பயனடைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உடல் ஆரோக்கியம் பாதுகாத்தல், மன நலன் பராமரித்தல் மற்றும் இயற்கையுடன் ஒன்றி வாழ்தல் ஆகியவற்றின் அடிப்படையில் சித்தர்கள் வாழ்ந்த காலம் இருந்ததாகவும், நவீன கால இடர்பாடுகள் எதிர்வினையாற்றி இருப்பதால் நோய்கள் பெருகியிருப்பதாகவும் கூறிய

அவர், சித்த மருத்துவம் அதற்கும் தீர்வுகாணும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேநதிர மோடி தலைமையிலான அரசு மரபு வழியிலான மருந்துகளை பாதுகாப்பதற்கும், அவற்றை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்வதற்கும் அயராது நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மூலிகைகள், சித்த மருத்துவம், ஆராய்ச்சி, ஆகியவை குறித்த தகவல் பெட்டகம் டிஜிட்டல் மயமாக்கப்பட்டிருப்பதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

***(Sound Byte — சி பி ராதாகிருஷ்ணன் — 35 Sec.)***

<<<<<<<>>>>>>

தமிழகத்தை சேர்ந்த தியாகிகளையும், சான்றோர்களையும் பிரதமர் திரு நரேந்திர மோடி தவறாமல் நினைவுகூர்ந்து வருவது மகிழ்ச்சி அளிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

ராணி வேலு நாச்சியாரின் பிறந்தநாளையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவை தமது சமூக வலைதளத்தில் டாக்டர் எல். முருகன் பகிர்ந்துள்ளார்.

இந்திய விடுதலைக்கு பெரும் பங்காற்றிய வீர மங்கை ராணி வேலு நாச்சியாரை பிரதமர் போற்றியிருப்பது தமக்கு மகிழ்வை தருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த 9 மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் இன்று எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்படுவதால், தமிழக கடலோர மீனவ சமுதாய மக்கள் பெரும் இன்னல்களையும், மன உளைச்சலையும் சந்தித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, தமிழகத்தை சேர்ந்த 73 மீனவர்களும், 251 மீன்பிடி படகுகளும் இலங்கை காவலில் உள்ளதாக கூறியுள்ள முதலமைச்சர், மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க

தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு வெளியுறவுத்துறையிடம் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழக அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுத்துவற்கான ஆணையை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று பிறப்பித்துள்ளார்.

இதன்படி, கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்காக பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு ஓய்வூதிய நிதியத்திற்கு தேவைப்படும் கூடுதல் செலவினை தமிழக அரசே ஏற்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழக அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியத்திற்கான புதிய திட்டத்தை திமுக அரசு அவசர கதியில் அறிவித்து, தேர்தல் ஆதாயம் தேட முயற்சிப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தலுக்கு பிறகு ஆட்சி அமைப்பவர்கள் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கான நிதி ஆதாரத்தை எவ்வாறு பெறுவார்கள் என்றும் கேள்வி எழுப்பினார்.

இடைநிலை ஆசிரியர்களின் கோரிக்கைகள், துப்புரவு பண்யிளார்கள் பிரச்சினை உள்ளிட்டவை குறித்து அக்கட்சி மௌனம் சாதித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் இன்று மாநிலம் முழுவதும் நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் கடையால் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பழங்குடியின மக்களிடையே நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த விழிப்புணர்வு முகாமை மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா பார்வையிட்டார்.

அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் இந்த முகாம்கள் நாளையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

**மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.**

**இந்த இயக்கத்தின்மூலம், வேலைநாட்கள் 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், காலதாமதமின்றி வங்கிக் கணக்குகளில் ஊதியம் செலுத்த வழி ஏற்பட்டுள்ளதாகவும் நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.**

***(Sound Byte — பயனாளிகள் - 41 Sec.)***

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முன்னேற்பாடு குறித்த ஆலோசனை கூட்டம் மாநில அமைச்சர் திரு மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

நாமக்கல் மாவட்டம் பரளி ஊராட்சியில் பறவைக்காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி ஆய்வு மேற்கொண்டார்.

----------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செவித் திறன் குறைபாடுடையோருக்கான உயர்நிலை பள்ளியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களுக்கு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் சான்றிதழ்களை வழங்கினார்.

-----------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் ஆருத்ரா தரிசனம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சுப்மன் கில் தலைமையிலான இந்த அணியில் ரோஹித் சர்மா, விராட் கோலி, முகமது சிராஜ் உள்ளிட்ட 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி வதோதராவில் வரும் 11-ஆம் தேதி நடைபெறுகிறது.

-------------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தமிழக அணி, ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

-----------------

இந்தியாவுக்கு எதிரான முதலாவது இளையோர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 302 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் தென்னாப்பிரிக்கா சற்றுமுன்வரை 4 புள்ளி ஐந்து ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 35 ரன் எடுத்துள்ளது.

Benoni-யில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 301 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

--------------------

திருச்சி மத்திய மண்டல அளவிலான தீயணைப்பு வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டி பெரம்பலூரில் இன்று தொடங்கியது.

<<<<<<<END>>>>>>